பக்கங்கள்:09 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 27 செவ்வாய்க்கிழமை 12.07.2022 கதிர் 249

இனி து ரகசியம் அல்ல!

குளத்தைக் கலக்கிப் பருந்துக்குக் கொடுத்தல் என்ற பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு.

நமது அறப்படித்த எதிரணி எம்.பிகள் – சஜித் உட்பட – அப்படி முட்டாள்தனமான காரியத்தை தான்பண்ணிக்கொண்டிருக்கின்றார்கள் என்றே

☞2

## ஜனாதிபதி ஆசனத்துக்கு சஜித்தின் பெயரைப் பரிந்துரைக்கத் தீர்மானம்



### ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் கூட்டத்தில்

கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதும் வெற்றிடமாகும் ஜனாதிபதி ஆசனத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் பெயரைப் பரிந்துரைப்பதற்கு பிரதான எதிர்க்கட் சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் இது தொடர்பில்

☞8

## இந்திய மீனவர்கள் 6 பேர் நேற்று கைது

(ந.லோகதயாளன்)

எல்லை தாண்டி மீன்பிடித்த 6 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் – காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஒரு படகைக் கைப்பற்றிய கடற்படையினர் அதிலிருந்த 6 இந்திய மீனவர்களையும் கைதுசெய்தனர்.

☞8

# சகல அமைச்சர்களும் விலகத் தீர்மானம்; பிரதமர் இராஜினாமாவுக்குப் பின்னடிப்பு

### சட்டத்தின் பிரகாரம் பதில் ஜனாதிபதியாக ரணில் காய்நகர்த்தல்



இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமையைத் தொடர்ந்து அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகத் தீர்மானித்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

☞2

## கோட்டா வெளிநாட்டுக்கு என்று நான் வாய் தவறி கூறிவிட்டேன்



### தெரிவித்ததை உடனே மறுத்த சபாநாயகர்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளிநாடு சென்றுள்ளார் என்று பி.பி.சி. உலகச்சேவைக்கு நான் வாய் தவறி கூறிவிட்டேன் – என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி

☞2

## ஜனாதிபதியின் செய்திகளை சபாநாயகரே அறிவிப்பாராம்

### கோட்டாவின் ஊடகப் பிரிவு கூறுகின்றது

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வெளியிடப்படும் அனைத்துச் செய்திகளும் சபாநாயகர் ஊடாகவே வெளியிடப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனால் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன வெளியிடும் அறிவிப்புகளை மாத்திரம் ஜனாதிபதியால் வெளியிடும் உத்தியோகபூர்வ அறிவிப்புகளாகக் கருத

☞8

## கப்பலில் வந்த உர விநியோகத்தில் கிளிநொச்சிக்கு மொட்டையடிப்பு!

### 2 லட்சத்து 61 ஆயிரம் மூடைகளில் ஆக 40 மட்டுமே அந்த மாவட்டத்துக்கு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 11

நாட்டிற்குள் எடுத்து வரப்பட்ட 2 லட்சத்து 61 ஆயிரம் மூடை உரத்தை நாட்டுக்குள பங்கிட்டு விநியோகிக்கும் விடயத்தில் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் வேண்டுமென்றே திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

☞8

## அநுர - சம்பிக்க சந்திப்பு



மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், சம்பிக்க ரணவக்க தலைமையிலான 43ஆம் படையணி உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜே.வி பியின் தலைமையகத்தில்

☞2

### 15 ஆம் திகதி கூடுகின்றது நாடாளுமன்றம்

## புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க 20 ஆம் திகதி சபையில் வாக்கெடுப்பு!



நாடாளுமன்றத்தை எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கூட்டம், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று மாலை

☞2

## எரிபொருள் வரிசையில் மற்றுமொரு உயிரிழப்பு

### வவுனியாவில் பரிதாபம்



(வவுனியா நிருபர்)

வவுனியாவில் பெற்றோல் வரிசையில் நின்று விட்டு இளைப்பாறுவதற்காகச் சென்றவர் மயங்கி விழுந்து மரணமடைந்துள்ளார்.

நேற்று மதியம்

☞2

## சர்வகட்சி அரசில் கூட்டமைப்பு பங்காளியாக இருக்க முடியாது



### வெளியிலிருந்து ஆதரவு வழங்கலாம் என்கிறார் சித்தர்

நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமையில் சரியானதொரு இடைக்கால சர்வகட்சி அரசு அமையுமாக இருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியில் இருந்து ஆதரவு வழங்கலாம்.

☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தோன்றுகின்றது

யதார்த்தப் புறநிலைகளைக் கருத்தில் எடுக்காமல் – நிலைமை என்னவென்பதைக் கவனத்தில் கொள்ளாமல் – கற்பனை உலகில் தீர்மானங்களை எடுக்கும் முட்டாள்தனமான தலைவர்களாகதான் அவர்களின் பலர் இருக்கின்றனர்.

★ ஆக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மட்டும்தான் களத்தில் இருந்து ஓடி ஒளித்து இருக்கின்றார். அவர் நாளையுடன் பதவியை ராஜினாமாச் செய்வார் எனக் கூறினார் என்று சபாநாயகரும் பிரதமரும் தெரிவிக்கின்றனர். எழுத்தில் இன்னும் அவர் ராஜினாமாஜ் கடிதத்தைத் தரவில்லை. சரி ஒரு பேச்சுக்கு அது நாளை வரும் என்ற தகவலை நம்பி ஏற்கலாம்.

★ ஆனால் இன்னும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது பதவியை ராஜினாமாச் செய்யவில்லை. மக்கள் எழுச்சி என்ற கிளர்ச்சியைக் காட்டி கோட்டாவை போல அவரை ஓட வைப்பது சாத்தியமா என்பதுகேள்வி. அவரைப்பொறுத்தவரை அவருக்கு இழப்பதற்கு இனி எதுவும் இல்லை. இருந்த வீட்டையும் எரித்து விட்டார்கள். அவரது கட்சி கூட அந்த எரிந்து சாம்பரான நிலைமைதான். அவரையோ, அவரது மனைவியையோ இலக்கு வைத்து, அச்சுறுத்தி, ஏதும் செய்விக்கலாம் என்றால் அது நடக்கின்ற காரியம் அல்ல. அவர் அரசியலில் குள்ளநரி. ரணில் இளைஞராக இருந்த காலத்தில் அவரின் தொகுதியில் இயங்கிய பட்டலந்த வதை முகாம் மறக்க கூடியது அல்ல.

★ தப்பித் தவறி அறிவித்தபடி கோட்டாபய தமது பதவியை நாளை ராஜினாமாச் செய்தால் இப்போதைய நிலைவரப்படி உடனடியாக பிரதமர் ரணிலே பதில் ஜனாதிபதியாவார். அது தவிர்க்க முடியாத கட்டாயமாகவே இருக்கும். அப்படி இல்லை என்றால் நாளை தாம் பதவி விலக முன்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க அல்லாத வேறு ஒருவரைப் பிரதமராக நியமித்து, அவருக்குப் பதவிப்பிரமாணம் செய்து வைத்த பின்னர் – அந்த நபரை ரணில் இடத்துக்கு பிரதமராக்கிய பின்னர் – தமது பதவியைத் துறக்க வேண்டும். ஆனால் அப்படி நடப்பதற்கான வாய்ப்புகள் மிக மிகக் குறைவு. தன்னுடைய உத்தியோகபூர்வ செயலகமும், ஜனாதிபதி மாளிகையும் தன் வசம் இல்லாத நிலையில் அவர் புதிய ஒருவருக்குப் பிரதமர் பதவியில் பதவிப் பிரமாணம் செய்து வைக்க இனி வாய்ப்புகள் குறைவுதான்.

★ சரி, ரணில் பதில் ஜனாதிபதியானாலும் அடுத்த ஒரு வாரத்துக்குள் நாடாளுமன்றம் கூடி எஞ்சிய பதவிக்காலத்துக்கான ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்யலாம். ஆனால் இன்றைய நிலையில் அது கூட நாடாளுமன்றத்தில் அதிக எண்ணிக்கையான உறுப்பினர்களைக் கொண்ட மொட்டுக் கட்சியின் கைகளில் தான் உள்ளது. பொது இணக்கத்தின் அடிப்படையில் ஒரு ஜனாதிபதியை தேர்ந்தெடுக்க முடியாத நிலையே இப்போது வரை நீடிப்பதால் நாடாளுமன்றத்தில் ஒரு வாக்கெடுப்பு மூலமே அது தீர்மானிக்கப்படும். இந்த வாக்கெடுப்பில் ஆளும் பொதுஜன பெரமுனவைப் பிரித்து நிற்க வைக்கும் தந்ரோபாயத்தை எதிர்க்கட்சிகள் சாணக்கியமாக முன்னெடுக்காவிட்டால் மொட்டுக் கட்சி ஒன்றிணைந்து நின்று, தன் விருப்புக்குரிய ஆளை ஜனாதிபதி ஆகிவிடும். அது ரணில் விக்கிரமசிங்கவாகவே இருந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை, நாடாளுமன்றத்தில் அந்த தெரிவு ரகசிய வாக்கெடுப்பு என்பதால் ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது யாரேனும் ராஜபக்ஷவாகவோ கூட பதில் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு விடலாம்.

ஆகவே இந்த விடயங்களை எல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்து, எல்லோரையும் இணங்க வைத்து, ஏகமனதாக ஒரு ஜனாதிபதியையும், சர்வ கட்சி அரசையும் எல்லாத தரப்பினரதும் சம்மதத்துடனும் பங்களிப்புடனும் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதை விடுத்து முந்திரிக்கொட்டை மாதிரி தான் அடுத்த பதில் ஜனாதிபதி என்று அறிவிப்பை தமது ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கூட்டி சஜித் பிரேமதாஸ அறிவிப்பது புத்திசாலித்தனற்றமற்ற வேலை. ஆளும் பொதுஜன பெரமுன பக்கத்திலிருந்து ஒரு கணிசமான எம்.பிக்களை தங்கள் பக்கத்துக்கு வரக்கூடியதாக பிரித்தெடுக்காமல் இதில் சஜித் கட்சியினர் அகலக்கால் வைப்பது முட்டாள்தனம்.

இப்போதைய ஏற்பாடுகளின்படி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாளை பதவி விலகினால், உடன் பதில் ஜனாதிபதியாக ரணில் பதவியேற்பார் எனத் தெரிகின்றது. ஜனாதிபதி பதவி வெற்றிடமாவது பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பை நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் 15ஆம் திகதி அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகினது. ஒரு புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான வேட்புமனு 19ஆம் திகதி நடை பெறும் நாடாளுமன்ற அமர்வின் போது பெற்றுக் கொள்ளப்படும். ஒன்றுக்குமேற்பட்ட விண்ணப்பங்கள் வருமானால் இருபதாம் திகதியன்று இரகசிய வாக்கெடுப்பு மூலம் நாடாளுமன்றத்தில் தேர்தல் நடத்தப்பட்டு புதிய ஜனாதிபதி அறிவிக்கப்படுவார். அவரே புதிய அரசு பற்றியும் பிரதமர் குறித்தும் தீர்மானிப்பார். இதுதான் இப் போதைய நிலை.

தமது வீடு எரிக்கப்பட்டமையில், மிகுந்த மன வருத்தத்தில் இருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அப்படி வீடு எரிக்கப்பட்டதற்கான குற்றச்சாட்டை அவர் யார் மீது சுமத்துகிறார் தெரியுமா? ஒருவர் சுமந்திரன். மற்றவர் ஹக்கீம். இவர்கள் இருவரும் பிரதமர் பதவியை ராஜினாமா செய்ய ரணில் மறுப்பு என்ற சாரப்படத் தங்களின் ட்விட் கணக்கில் அறிவிப்புகளை விட்டபடியால் தான் அதைப் பார்த்து போராட்டக்காரர்கள் திரண்டு வந்து தனது வீட்டை எரித்தார்கள் என்று ரணில் பச்சையாக குற்றம் சாட்டுகிறார்.

நேற்று நடைபெற்ற சர்வ கட்சிக் கூட்டத்தில் இது தொடர்பில் ரணிலுக்கும் சுமந்திரனுக்கும் இடையில் கனத்த வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றன எனத் தெரிகிறது. அதன்போதே முக்கியமாக சுமந்திரனும் ஹக்கிமும் வெளியிட்ட செய்திதான் தன்னுடைய வீடு எரிப்புக்குப் பிரதான காரணம் எனப் பச்சையாகக் குற்றம் சுமத்தியுள்ளார் ரணில்.

'செல்லும் செல்லாதது எல்லாம் செட்டியார் தலை மேலே' என்பது போல, ஊரில் எல்லாப் பிரச்சினைகளுக்குமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தச் சரியான தலை நம் சுமந்திரன்தான் போலிருக்கிறது.

யார் வீட்டில் பிரச்சினை வெடித்தாலும் குற்றச்சாட்டு விரல்கள் என்னவோ அந்த மனிதர் மீதுதான். – பாவம் சுமந்திரன்!

– மின்னல் –

## சகல அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சர்வகட்சி அரசுக்கு இடமளிக்கும் வகையிலேயே அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகத் தீர்மானித்துள்ளனர்.

எனினும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகுவது குறித்து இன்னமும் தெளிவானதொரு அறிவிப்பை விடுக்கவில்லை. சர்வகட்சி அரசு அமைந்தால், பதவி விலகத் தயார் என்றே அவர் அறிவிப்பு விடுத்து வருகின்றார்.

நாளை 13ஆம் திகதி ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகினால் சட்டத்தின் பிரகாரம் உடனே பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்கும் வகையில் காய்நகர்த்தலை ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வருகின்றார்.

சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி ஒருவர் பதவி விலகினால் நாடாளுமன்றம் ஜனாதிபதிப் பதவிக்கு ஒருவரைத் தெரிவு செய்யும் வரைக்கும் பிரதமரே பதில் ஜனாதிபதியாக இருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், நாளை 13ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலக வேண்டும் என்பதே போராட்டக்காரர்களின் கோரிக்கையாகும்.

## கோட்டா வெளிநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எங்கே இருக்கின்றார் என்று பி.பி.சி. உலகச் சேவை நேற்றுப் பிற்பகல் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்திருந்த சபாநாயகர், அவர் அண்டை நாடொன்றுக்குச் சென்றுள்ளார். அவர் என்னுடன் தொடர்பில் இருக்கின்றார். எதிர்வரும் 13ஆம் திகதிக்குள் அதாவது புதன்கிழமைக்குள் நாடு திரும்புவார் என்று கூறியிருந்தார்.

இந்நிலையில், நேற்று மாலை இந்தியாவின் சர்வதேச செய்திச் சேவையான 'ஏ.என்.ஐ.' இற்கு கருத்துத் தெரிவித்த சபாநாயகர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையிலேயே இருக்கின்றார். நான் பி.பி.சி. உலகச் சேவைக்கு வாய் தவறி ஜனாதிபதி வெளிநாடு சென்றுவிட்டார் என்று கூறிவிட்டேன் – என்றார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடல் மார்க்கமாக திருகோணமலை கடற்படைத் தளத்துக்குச் சென்றுள்ளார் என்று சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

திருகோணமலை கடற்படை முகாமில் ஜனாதிபதியுடன் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் தங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## சர்வகட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் எம்.பி. தெரிவித்தார்.

சர்வகட்சி அரசில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கெடுக்குமா என்பது தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இடைக்கால சர்வகட்சி அரசில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்பது தொடர்பில் இதுவரை கூட்டமைப்பு பங்காளிக் கட்சிகளிடையே முறையான கலந்துரையாடல் நடைபெறவில்லை.

நாம் சர்வகட்சி அரசில் பங்காளியாகாமல் வெளியில் இருந்து ஆதரவு வழங்கலாம் என்பது எனது தனிப்பட்ட அபிப்பிராயம்.

நாட்டின் தற்போதைய பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். அதற்காக சரியானதொரு சர்வகட்சி அரசு அமையவேண்டும். அதற்காக நாம் அவர்களுடன் பங்காளிகளாக முடியாது – என்றார்.

## அநுர - சம்பிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நடைபெற்றது.

இதன்போது சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

சந்திப்பின் பின்னர் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும், அதுவரை அமையும் சர்வகட்சி அரசுக்கு ஆதரவு வழங்கத் தயார் எனவும் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

அத்துடன், தம்மால் முன்வைக்கப் பட்டுள்ள நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப் படும் பட்சத்தில் ஆட்சியைப் பொறுப் பேற்கத் தயார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## எரிபொருள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
டம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பண்டாரவன்னியன் சதுக்கம் பகுதியில் அமைந்துள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த 5 தினங்களாகப் பெற்றோல் வழங்கப்படாத நிலையில் மோட்டர் சைக்கிளை அரச உத்தியோகத்தர்களுக்கான வரிசையில் நிறுத்தி விட்டு குடும்பஸ்தர் ஒருவர் எரிபொருளுக்காகக் காவல் நின்றுள்ளார்.

நேற்றும் பெற்றோல் கிடைக்காமையால் நீண்ட நேரம் வரிசையில் நின்றுவிட்டு இளைப்பாறுவதற்காக நகரசபை முன்பாக உள்ள கடைப் பகுதிக்குச் சென்றபோது குறித்த குடும்பஸ்தர் மயங்கி விழுந்துள்ளார்.

இதையடுத்து, அவரை அருகில் நின்ற மோட்டர் சைக்கிளில் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும், அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு வருவதற்கு முன்னரே இறந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மரணமடைந்தவர் வவுனியா நகரசபையில் சுகாதார ஊழியராகக் கடமையாற்றும் வவுனியா, கொக்குவெளி பகுதியைச் சேர்ந்த மாணிக்கம் செல்வகுமார் (வயது 44) என்பவராவார்.

மரணமடைந்தவரின் மோட்டர் சைக்கிள் பெற்றோல் வரிசையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (100)

## புதிய ஜனாதிபதியைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நடைபெற்றது.

இதன்போது நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைக்கு அரசமைப்புக்குட்பட்ட வகையில் தீர்வு காண்பது குறித்தும், சர்வகட்சி இடைக்கால அரசை நிறுவுவது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனது பதவியை நாளை 13ஆம் திகதி துறப்பதாக அறிவித்துள்ளமையால் – அவ்வாறு நடைபெறும் பட்சத்தில் நாடாளுமன்றத்தை 15ஆம் திகதி கூட்டி, ஜனாதிபதி பதவியில் ஏற்பட்டுள்ள வெற்றிடம் குறித்து அறிவிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, வேட்புமனுக்களை கோருவதற்கும், 20ஆம் திகதி புதன்கிழமை வாக்கெடுப்பை நடத்துவதற்கும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பதவிக்கு ஒருவர் மாத்திரம் வேட்புமனுவைத் தாக்கல் செய்தால், வாக்கெடுப்பின்றி தேர்வு இடம்பெறும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் போட்டியிட்டால் வாக்கெடுப்பு மூலம் தேர்வு இடம் பெறும்.



காலைக்கதிர் Kalaikkathir

# ஆஸியுடனான இறுதிப் போட்டி: இலங்கை அணி அபார வெற்றி!

## இரட்டைச் சதம் அடித்தார் சந்திமால் 12 விக்கெட்டுக்களை வீழ்த்தினார் பிரபாத்







காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இலங்கை மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி அபார வெற்றி பெற்றுள்ளது.

ஒரு இன்னிங்ஸ் மற்றும் 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றுள்ளது.

இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்ரேலியா அணி முதல் இன்னிங்ஸில் 364 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 554 ஓட்டங்களை முதல் இன்னிங்ஸில் பெற்றுக்கொண்டது.

இதில் இரட்டைச் சதம் விளாசிய தினேஷ் சந்திமால் 206 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

ஆஸ்திரேலியா அணிக்கு எதிராக இரட்டைச் சதம் அடித்த முதல் இலங்கை வீரராக சந்திமால் சாதனை படைத்துள்ளார்.

இந்நிலையில், தமது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா அணி 151 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன்மூலம் ஒரு இன்னிங்ஸ் மற்றும் 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி அபார வெற்றியைப் பெற்றது.

பந்து வீச்சில் பிரபாத் ஜயசூரிய 12 விக்கெட்டுக்களை வீழ்த்தி அசத்தினார்.

முதலாவது போட்டியில் ஆஸ்ரேலியா அணியும், இரண்டாவது போட்டியில் இலங்கை அணியும் வெற்றி பெற்றதால் இரு அணிகளும் வெற்றிக்கிண்ணத்தைப் பகிர்ந்துகொண்டன.








காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## எச்சரிக்கை அறிவிப்பு

நமது நாட்டில் கட்டவிழும் அரசியல் நடத்தைகளும் கோலங்களும் என்ன செய்தியை நமக்குச் சொல்லுகின்றன என்பது குறித்து விவஸ்தையே இல்லாமல் – பிரக்ஞையேயின்றி – அரசியல் தலைவர்கள் நடக்கின்றார்கள் என்றே தோன்றுகின்றது.

இந்தப் போக்கின் விளைவு விபரீதமாக அமையப் போகின்றது என்பதுதான் மன வருத்தம் தரும் உண்மை.

பல விடயங்களும் சட்டத்துக்கு அமைவின்றியும், ஜனநாயக அலங்கோலங்களாகவும் இங்கு அரங்கேறுகின்றன.

சட்டத்தின் ஆட்சியும், ஜனநாயகத்தின் பண்பியல்பும் தார்மீக நியாயத்தின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படாமல் போகுமானால் – அதில் பெரும் தவறிழைக்கப்படுமானால் – நீதியை நிலைநிறுத்தி, நியாயத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மக்களே சட்டத்தைக் கையிலெடுக்க வேண்டிய துரதிர்ஷ்ட வசமான நிலைமை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

மக்கள் அளித்த ஆணையைத் தமது தவறான கையாள்கை மூலம் இழந்து விட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அந்த ஆணை தமக்குத் தொடர்ந்து இருப்பதாகக் காட்டிக் கொள்ள முயன்றபோது, அந்தத் தவறைத் திருத்தச் சட்டத்திலும், ஜனநாயகத்திலும் இடமிருக்கவில்லை. அதனால் மக்கள் சட்டத்தைத் தமது கையில் எடுத்து, உண்மையை நிலைநாட்ட, சட்டத்துக்கு முரணான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அதற்காக, இது சம்பந்தமான எல்லா விடயங்களையும் சட்டத்துக்கு உட்படாமலேயே நடத்தி முடித்தால் என்ன என்றஎண்ணம், இதுவரைஅவ்விடங்களைக்கையாண்ட தரப்புகளிடையே இப்போது ஏற்பட்டுவருகிறது.

சட்ட முறைமையின் கீழ், ஜனநாயகப் பாணியில் இந்த நாட்டைத் திருத்த முடியாதது, விடயங்கள் யாவற்றையும் மக்கள் கையிலெடுத்துத் தாமே நிறைவேற்றியாவது தான் சரியான வழி என்ற எண்ணப் போக்குத் தலைதூக்க வழி செய்து விட்டது.

இலங்கையின் தேசிய அரசியலில் இப்போது கட்டவிழ்ந்த விடயங்கள் யாவையும் சட்ட ரீதியாக நடந்தவை அல்ல.

ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றுக்குள் பலவந்தமாக மக்கள் கூட்டமாக நுழைந்து ஜனாதிபதி கோட்டாபயவின் ஆட்சி அதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்கியமை வரை சகலதும் சட்டத்திற்கு அமைவான நடவடிக்கைகள் அல்ல.

ஆனால், தொடர்ந்து இந்தப் பிரச்சினையை அத்தகைய வழியில்தான் கையாள்வது ஒரே வழி, சட்ட முறைமையில் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்ற கருத்தியல் – தீர்மானம் – போராட்டத்தில் ஈடுபடுவர்களுக்கு வராமல் பார்த்துக் கொள்வது, சட்ட ரீதியில் இப்பிரச்சினையைக் கையாண்டு தீர்வு காண வேண்டிய பொறுப்பில் உள்ளவர்களின் தலையாய கடமை.

குறிப்பாக, சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தக் கூடிய வகையில், செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது நாடாளுமன்றத்தின் கடமை – அத்தியாவசிய கடப்பாடு – பொறுப்பு – ஆகும்.

மக்கள் தேர்தல்கள் மூலம் அளித்த ஆணையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இழந்தமை மாதிரி, நாடாளுமன்றமும் கூட இழந்து விட்டது என்ற எண்ணம் தான் போராட்டக்காரர்கள் மத்தியில் – மக்களிடையே – தலைதூக்கியுள்ளது.

இந்தச் சமயத்தில் விரைந்த தீர்வுக்கு – இழுபறிப்படாமல் சுமுக ஏற்பாட்டுக்கு – சட்ட ரீதியான இணக்க நடவடிக்கைக்கு – நாடாளுமன்றத் தரப்பு வராமல் சுயநல அரசியலுக்காக இழுபறிப்படுமானால், எஞ்சிய விடயங்களையும் சட்டத்தையும், அரசமைப்பையும் புறக்கணித்து, மக்களே தம் கையில் விவகாரங்களை எடுத்து, மிச்சத்தையும் ஒப்பேற்றி, முடிக்கும் அவலம் நேர்ந்து விடும். ஆகவே நாடாளுமன்றத் தரப்புகளுக்கு இந்த யதார்த்த நிலை பற்றிய எச்சரிக்கை சமர்ப்பணம்.

# சர்வகட்சி அரசின் பிரதமராக சஜித்தை பரிந்துரைக்க முஸ்தீபு

## ரஞ்சித் மத்தும பண்டார கூறுகிறார்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சர்வகட்சி அரசாங்கத்தின் பிரதமராக பரிந்துரைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். அவ்வாறு அவரது பெயரை பிரதமர் பதவிக்கு பரிந்துரைத்தால் பெரும்பான்மையை நிரூபிப்பது அவசியமாகும். எனவே, தான் இது தொடர்பில் ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி த் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஜனாதிபதி மற்றும் பிரதமரை பதவி விலகுமாறு வலியுறுத்தி இலங்கை அரசியல் வரலாற்றில் முதன் முறையாக ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகையை பொது மக்கள் முற்றுகையிட்டுள்ளனர்.

இதனையடுத்து கட்சி தலைவர் கூட்டத்தில் 95 சதவீதமான கட்சி தலைவர்களின் இணக்கப்பாட்டுடன் ஜனாதிபதி, பிரதமரை பதவி விலகுமாறு சபாநாயகர் ஊடாக நாமும் கேட்டுக் கொண்டோம். இதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகி சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்பது அரசியல் கட்சிகளது கோரிக்கையாக மாத்திரமின்றி, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சர்வ மதத் தலைவர்களினதும் கோரிக்கையாக இருந்தது.

தற்போது அதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. அதற்கமைய சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளோம்.

தற்போது அரசமைப்பின் பிரகாரம் சபாநாயகர் பதில் ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியும். அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை விருப்பத்தைப் பெறுபவர் எஞ்சிய காலத்துக்கு ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடியும்.

இவ்வாறு ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுபவர் 2024 நவம்பர் 17 ஆம் திகதி வரை ஜனாதிபதியாகப் பதவி வகிப்பார். எனவே தான் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவைப் பெறுபவர் ஜனாதிபதியாக வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பாலான நாடுகளில் இவ்வாறு ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகும் சூழல் ஏற்பட்டால் புதிய பிரதமராக எதிர்க்கட்சித் தலைவரின் பெயரே பரிந்துரைக்கப்படும்.

அதற்கமைய எதிர்க்கட்சித் தலைவரை அடுத்த பிரதமராக பரிந்துரைப்பது தொடர்பில் ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளோம்.

அவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் பிரதமராக பரிந்துரைக்கப்பட்டால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும்.

அதற்கமைய சர்வ கட்சி பெரும்பான்மையுடன் எதிர்க்கட்சித் தலைவரைப் பிரதமராக நியமிப்பதே எமது நிலைப்பாடாகும். அதன் பின்னர் அனைத்து கட்சிகளின் பங்கேற்புடன் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படும். ஜே.வி.பியிற்கும் இதற்கான அழைப்பை விடுத்திருக்கின்றோம். அவர்கள் நாட்டின் எதிர்காலத்துக்காக சிந்தித்து செயற்படுவர் என்று எதிர்பார்க்கின்றோம். – என்றார்.

# எரிசக்தி அமைச்சர் காஞ்சன முன்வைத்த எரிபொருள் விலைகள் சரியானவை அல்ல!

## நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு தேசிய இயக்கம் தெரிவிப்பு

கோப் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின்படி வலுசக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் அண்மையில் முன்வைத்த எரிபொருள் விலைகள் சரியானவை அல்ல.

அமைச்சரால் முன்வைக்கப்பட்ட தற்போதைய எரிபொருள் விலை உண்மையான விலையை விட 200 ரூபா அதிகமாகும் என நுகர்வோர் உரிமைகளை பாதுகாப்பதற்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நுகர்வோர் உரிமைகளை பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே வெளியிட்டுள்ள அறிக்கையில் –

தற்போதுவெளியிடப்பட்டுள்ளதரவுகளின் படி, அரச வரி உள்ளடங்களாக அனைத்து வகையான எரி பொருள்களையும் 300 ரூபாவிற்கு குறைவாக விற்பனை செய்ய முடியும்.

ஆனால் தற்போது மண்ணெண்ணெய் தவிர்ந்த ஏனைய அனைத்து எரிபொருள்களும் 470 ரூபாவுக்கும் அதிகமான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

அதன்படி பெற்றோல், டீசல் மூலம் அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் 200 ரூபாவுக்கு மேல் இலாபம் ஈட்டுவது தெரிகிறது.

இந்நிலையில், இலங்கை மின்சார சபையின் மின் பிறப்பாக்கிகளுக்கு அதிக விலைக்கு எரிபொருள் வழங்கப்படுவதால் மின் கட்டணம் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. அப்படியானால் இந்தச் சுமையை நாட்டு மக்கள் சுமக்க நேரிடும்.

எரிசக்தி அமைச்சர் மற்றும் சுங்கத் திணைக்களம் எரிபொருள்களின் விலைகள் தொடர்பாக முன்வைத்த தரவுகளுக்கு இடையில்பாரியமுரண்பாடுகாணப்படுகிறது.

ஆனால் இது தொடர்பாக கணக்கறிக்கைகளைப் பார்வையிடுவதற்கு அரசின் தலைமை கணக்காளர் குழு தவறிவிட்டது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் சிங்கப்பூர் விலையின் அடிப்படையில் விலைகளை நடைமுறைப்படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உண்மையில் எரிபொருள் கொள்வனவு செய்யப்படும் நாட்டில் உள்ள எரிபொருளின் விலைக்கேற்ப விலைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அனைத்து வகையான எரிபொருள்களையும் 200 ரூபாவால் குறைக்க முடியும் என்ற நிலை காணப்படுகின்ற போதிலும், நுகர்வோர் அதிகார சபையும் இது தொடர்பில் மௌனமாக இருக்கிறது.

நான்கைந்து நாள்கள் வரிசையில் நின்று எரிபொருள் பெறும் வாடிக்கையாளர்களின் பணத்தைக் கொள்ளையடிக்கும் இவ்வாறான நிறுவனங்களை அனுமதித்தால் அதற்கு அரசு நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டும்.

எரிபொருளை ஒழுங்குபடுத்துவதற்கு சுதந்திரமான அமைப்பு தேவை என்று நாம் குரல் எழுப்பி பல ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் இன்றும் கூட எரிபொருளை ஒழுங்குபடுத்துவதற்கு சுயாதீன அமைப்பு நியமிக்கப்படவில்லை.

எரிபொருளின் விலையை ஒழுங்குபடுத்தி உண்மையான விலைத் தகவல்களை மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன். – என்றார்.

# இலங்கைக் கடலோர எல்லையில் இந்தியக் கண்காணிப்பு அதிகரிப்பு

இலங்கையில் பெரும் அரசியல் நெருக்கடிக்கு மத்தியில், இந்திய கடலோர காவல்படை தனது ஹோவர் கிராப்ட், விமானம் மற்றும் ரோந்துப் படகுகள் மூலம் இலங்கைத் தீவு தேசத்துடனான கடல் எல்லையில் கண்காணிப்பை முடுக்கி விட்டுள்ளது. தடுக்கிறது. அங்கிருந்து அகதிகள் அல்லது இந்தியாவுக்கு எதிரான சக்திகள் ஊடுருவுவதைத் தடுக்கவே இந்த நடவடிக்கை எனத் தெரிவிக்கப்பட்டது.

தமிழகக் கடற்கரையிலிருந்து கேரளக் கடற்கரைப் பகுதிகள் வரை கடலோரக் காவல் படையினர் மற்றும் அவர்களின் கலங்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் இணைந்து கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அரசு அதிகாரிகள் புதுடில்லியில் ஏ.என்.ஐயிடம் தெரிவித்தனர்.

தீவு தேசத்தில் அரசியல் நெருக்கடியின் புதிய சுற்றுத் தொடங்கியவுடன் கண்காணிப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டன, அங்கு மக்கள் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டனர். நாட்டின் தலைமை தலைநகரான கொழும்பில் இருந்து தப்பிச் சென்றதாக கூறப்படுகிறது என ஏ.என்.ஐ. மேலும் தெரிவித்தது.




## இலங்கைக்கு என்றும் இந்தியா உறுதுணை!

### வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் திட்டவட்டம்



இந்த நெருக்கடியின் போது இலங்கைக்கு உறுதுணையாக இந்தியா தொடர்ந்தும் செயற்படும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னேற்றங்களைக் கண்காணித்து வருவதாகவும், இப்போது அகதிகள் நெருக்கடி இல்லை என்றும் கூறினார்.

திருவனந்தபுரம் விமான நிலையம் அருகே செய்தியாளர்களிடம் கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண இலங்கை முயற்சித்து வருவதாகவும் அடுத்த நடவடிக்கை தொடர்பாக இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாங்கள் இலங்கைக்கு ஆதரவாக இருந்து வருகிறோம், உதவி செய்ய முயல்கிறோம், எப்பொழுதும் உதவி செய்து வருகிறோம் என்றார்.

## இலங்கை மக்களுடன் இந்தியா நிற்கின்றது!

### வெளிவிவகாரப் பேச்சாளர் கருத்து




இலங்கை மக்களுடன் இந்தியா நிற்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் உத்தியோகபூர்வ பேச்சாளர் அரிந்தம் பக்சி தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள நிலைமை தொடர்பான ஊடகக் கேள்விகளுக்கான பதிலளிப்பாகவே இந்தக் கருத்தை பக்சி வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த பக்சி, இலங்கையில் அண்மைய நிலைமைகளை தாங்கள் நெருக்கமாக அவதானிக்கிறோம் எனவும், 'அயல்நாடு முதன்மைக் கொள்கை'யின் அடிப்படையில் இலங்கையிலுள்ள மோசமான பொருளாதார நிலைமைக்கு மத்தியில் 3.8 பில்லியனுக்கும் அதிகமான உதவிகளை இந்தியா வழங்கியது எனவும் கூறியுள்ளார்.

## தமிழர்களை அழிக்க வந்தோர் அழிந்து கொண்டிருக்கிறார்கள்

### சுப. வீரபாண்டியன் கருத்து



இலங்கையில் தமிழர்களை அழிக்க வந்தவர்கள் அழிந்து கொண்டிருக்கிறார்கள் என சுப. வீரபாண்டியன் கூறியிருக்கின்றார்.

கோவை சூலூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தமிழக அரசால் பாவேந்தர் பாரதிதாசன் விருது பெற்ற செந்தலை கவுதமனுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. இதில் திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப. வீரபாண்டியன் கலந்து கொண்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

இலங்கையில் நடந்து கொண்டிருக்கின்ற உள்நாட்டுப் போராட்டத்தை பார்க்கும்போது தமிழர்களை அழிக்க வந்தவர்கள் அழிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. இதுபோன்ற அழிவு எந்த ஒரு நாட்டிற்கும் வரக்கூடாது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வீட்டிற்கு தீ வைக்கப்பட்டிருக்கிறது. எந்த நாட்டிற்கு ஓடுவது என தெரியாமல் சொந்த நாட்டிற்குள்ளேயே பாதுகாப்பிற்காக அலைந்து கொண்டிருக்கிறார்கள். கம்பராமாயணத்தில் அனுமான் இலங்கைக்கு தீவைத்தார் என்பது கதை. ஆனால் இலங்கை யாழ்ப்பாண நூலகத்திற்கு தீ வைத்தவர்கள் தற்போது ஆளக் கூடியவர்கள். இன்னொரு இனத்தை அழிக்கக்கூடாது என்பதற்கு இதுவே ஒரு எடுத்துக்காட்டு. - இவ்வாறு அவர் கூறினார்.





## புத்தகங்கள் தீக்கிரையானமை; கண்ணீர் மல்க ரணில் கவலை!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீடு போராட்டக்காரர்கள் சிலரால் தீக்கிரையாக்கப்பட்ட பின்னர் ரணில் விக்ரமசிங்கவின் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான ஸ்ரீ கோத்தாவில், கட்சி உறுப்பினர்களிடையே சிறப்பு கூட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

அதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சில கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

அதில் பேசிய அவர், சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை குறித்து தான் எந்த விதத்திலும் கவலை கொள்ளவில்லை ஆனால் நான் படித்த புத்தகங்கள் தீக்கிரையாக்கப்பட்டமையை எண்ணிதான் நான் கவலைக் கொள்கிறேன், எனக் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

தான் மூன்று தலைமுறைகளாக சேர்த்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்களை மூன்று அறைகளில் சேமித்து வைத்திருந்தேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த புத்தகங்கள்தான் அன்றைய தினம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்லாமல் அவரின் அந்த வீட்டை அவர் ஏற்கனவே கொழும்பு றோயல் கல்லூரிக்கு எழுதி வைத்துள்ளார். இந்த நிலையில்தான் இந்த வீடு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தான் எடுத்துள்ளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



எரிபொருள் விநியோகத்தைச் சரி செய்வதற்குத் தான் நடவடிக்கை எடுத்திருக்கிறேன் எனவும், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தை பெற்றுக் கொள்வதற்கான இறுதி கட்ட நடவடிக்கை வரை தான் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுபோலநெருக்கடியைதீர்ப்பதற்கானநடவடிக்கையின் கடைசி கட்டத்தில்தான் அரசியல் பழிவாங்கல் நிகழ்வாக தனது வீடு தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# பதில் மற்றும் இடைக்கால ஜனாதிபதி குறித்து உடன் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்!

## கட்சித் தலைவர்களை வலியுறுத்துகிறது சட்டத்தரணிகள் சங்கம்



ஜனாதிபதியின் பதவி விலகல், பதில் ஜனாதிபதி மற்றும் இடைக்கால ஜனாதிபதி தெரிவை தாமதப்படுத்தாது துரிதமாக செயற்படுத்தும் பொறுப்பு அரசியல் கட்சித் தலைவர்களுக்கு உண்டு.

கட்சி தலைவர் கூட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட தீர்மானத்தை செயற்படுத்த சகல கட்சி தலைவர்களும் பொது இணக்கப்பாட்டுக்கமைய செயற்பட வேண்டும்.

நாடாளுமன்றத்தின் ஊடாக மாத்திரமே பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக பிரச்சினைகளுக்கு குறுகிய கால அடிப்படையில் தீர்வு காண முடியும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகை ,ஜனாதிபதி செயலகம் நாட்டின் தேசிய சொத்துக்கள்.பொது மக்கள் அவற்றின் கௌரவத்தை பாதுகாக்க வேண்டும்.

வன்முறை செயற்பாடுகள் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வாக அமையாது, மாறாக நெருக்கடிகளை மேலும் தீவிரப்படுத்தும் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாட்டில் பொருளாதார பாதிப்பு அரசியல் நெருக்கடியாகத் தீவிரமடைந்து தற்போது அரசமைப்பு ரீதியிலான நெருக்கடியைத் தோற்றுவித்து முழு நாட்டின் ஸ்திரத்தன்மையையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு எதிரான போராட்டம் ஜனநாயக ரீதியிலான அமைதி வழியாகக் காணப்பட்ட போதிலும், போராட்டத்தில் இடம்பெற்ற ஒருசில சம்பவங்கள் முற்றிலும் வெறுக்கத்தக்கனவாகக் காணப்பட்டன. போராட்டக்காரர்கள், பாதுகாப்பு தரப்பினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை வெறுக்கத்தக்கதாகும்.

ஊடகவியலாளர்கள் மீது மிலேச்சத்தனமான முறையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் வன்மையாக கண்டிக்கத்தக்கது.

இந்தத் தாக்குதல் இயல்பானதாக இடம்பெற்றது என குறிப்பிட முடியாது.ஊடகவியலாளர்களின் உரிமை பாதுகாக்கப்படுவதுடன், ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகங்கள் மீதான அடக்குமுறை நிறுத்தப்பட வேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட வீடு தீக்கிரைக்கியாக்கப்பட்டுள்ளமை முற்றிலும் வெறுக்கத்தக்கது.

இவ்வாறான செயற்பாடுகள் ஜனநாயக கொள்கைக்கு எதிரானது. போராட்டக்காரர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பிரதமரின் வீடு தாக்கப்பட்டமை தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் வலியுறுத்தியுள்ளோம்.

வன்முறை சம்பவங்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தும்.ஜனநாயக ரீதியிலான போராட்டம் வன்முறையாகத் தோற்றமடையும் போது சர்வதேசத்தின் மத்தியில் இலங்கை தொடர்பில் தவறான நிலைப்பாடு தோற்றம் பெறும். தற்போதைய நிலையில் முழு உலகமும் இலங்கை தொடர்பில் அவதானம் செலுத்துகிறது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் பதவி விலகியதை தொடர்ந்து அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் நாடாளுமன்றத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட வேண்டும் என அரசமைப்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி மற்றும் பிரதமர தமது பதவிகளில் இருந்து விலக தீர்மானித்துள்ளனர் என ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்னர் ஜனாதிபதி பதவி விலகுவாராயின் அவர் பதவி விலகல் தொடர்பிலான கடிதத்தை, தனது உத்தியோகப்பூர்வ கைச்சாத்திடலுடன் சபாநாயகருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

ஜனாதிபதி பதவி வெற்றிடமானதைத் தொடர்ந்து பதில் ஜனாதிபதியாக பிரதமர் தெரிவு செய்யப்பட வேண்டும்.பதில் ஜனாதிபதியாக பிரதமர் பதவியேற்க முடியாத நிலை காணப்படுமாயின் சபாநாயகர் பதில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும்.

பதில் ஜனாதிபதியாக சபாநாயகர் தெரிவு செய்யப்பட்டு ஒரு மாத காலத்துக்குள் நாடாளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதி ஒருவர் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும்.

இலங்கை அரசியல் வரலாற்றில் 1993 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அப்போதைய பிரதமர் டி.பி.விஜயதுங்க ஒருசில மணித்தியாலங்களுக்குள் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து 1993. 05.07ஆம் திகதி நாடாளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டார். இத்தன்மையைத் தற்போது செயற்படுத்தலாம்.

பதில் ஜனாதிபதியாக சபாநாயகர் தெரிவு செய்யப்பட்டு ஒருமாத காலத்துக்குள் நாடாளுமன்றத்தின் ஊடாகத் தகுதியான ஒருவர் இடைக்கால ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்குப்பற்றலுடனான வாக்கெடுப்பில் 50 சதவீதத்துக்கு அதிகமாக அதாவது சபாநாயகரைத் தவிர்த்து 224 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்குகளில் 113 வாக்குகளை பெறுபவர் இடைக்கால ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும்.

ஜனாதிபதியின் பதவி விலகல், பதில் ஜனாதிபதி, இடைக்கால ஜனாதிபதி தெரிவைத் தாமதப்படுத்தாது துரிதமாக செயற்படுத்தும் பொறுப்பு அரசியல் கட்சித் தலைவர்களுக்கு உண்டு. கட்சித் தலைவர் கூட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட தீர்மானத்தை செயற்படுத்த சகல தலைவர்களும் பொது இணக்கப்பாட்டிற்கமைய செயற்பட வேண்டும்.

ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றை கைப்பற்றியுள்ள பொது மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். இவ்விரு கட்டடங்களும் நாட்டு மக்களின் பழைமையான சொத்து, ஆகவே அவற்றுக்கு சேதம் ஏற்படுத்தாது அதன் கௌரவத்தை பாதுகாக்கும் பொறுப்பு நாட்டு மக்களுக்கு உண்டு. – என்றார்.

# இடைக்கால ஜனாதிபதியாக பிரதம நீதியரசரை நியமித்து தேர்தலுக்குச் செல்வதே சிறந்தது!

## பிரசன்ன ரணதுங்க இப்படிக் கருத்து

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டுமாயின் நிலையான அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும். முழு அரசியல் கட்டமைப்பையும் மக்கள் எதிர்க்கும் பின்னணியில் சர்வக்கட்சி அரசாங்கத்தை மக்கள் ஏற்பார்களா என்பது சந்தேகத்திற்குரியது. இடைக்கால ஜனாதிபதியாக பிரதம நீதியரசரை நியமித்து, பொதுத் தேர்தலுக்கு செல்வதே சிறந்த தீர்மானமாக அமையும் என ஆளும் தரப்பின் பிரதம கொறடா பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

நாடு தீர்மானமிக்க தருணத்தை தற்போது எதிர்கொண்டுள்ளது. தற்போதைய நெருக்கடியான நிலைமைக்கு இதுவரையில் ஆட்சியில் இருந்த அரச தலைவர்களும், அரசாங்கங்களும் பொறுப்புக்கூற வேண்டும். முறைகேடான அரச நிர்வாகம் தற்போதைய சகல பிரச்சினைகளுக்கும் மூல காரணியாக உள்ளது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியை பதவி விலகுமாறு கடும் அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது. மக்களின் அபிலாசைக்கு மதிப்பளித்து நாளை (புதன் கிழமை) பதவி விலகுவேன் என ஜனாதிபதி அறிவித்துள்ளார். நாட்டு மக்களைத் தொடர்ந்து ஏமாற்றாமல் நிலையான தீர்வு தொடர்பாக ஆராய்வது 225 நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் பொறுப்பாகும்.

பொருளாதார நெருக்கடி சகல பிரச்சினைக்கும் பிரதான காரணியாக உள்ளது என்பது புதிய விடயமல்ல, பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடியாக வியாபித்து முழு அரசியல் கட்டமைப்பையும் பலவீனப்படுத்தியுள்ளது. பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டுமாயின் அரசியல் ஸ்திரத்தன்மை



பேணப்பட வேண்டும் என சர்வதேச நிதி நிறுவனங்கள் அறிவுறுத்தியுள்ளன.

நாட்டு மக்கள் முழு அரச கட்டமைப்பையும் வெறுக்கிறார்கள். சர்வக்கட்சி அரசாங்கம் குறுகிய காலத் தீர்வாக மாத்திரம் காணப்பட வேண்டும். சகல கட்சி தலைவர்களையும் ஒன்றிணைத்து ஸ்தாபிக்கும் சர்வகட்சி அரசாங்கத்தை மக்கள் ஏற்பார்களா என்பது சந்தேகத்திற்குரியது. அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் தொடர்ந்து காணப்படுமாயின் எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது.

இடைக்கால ஜனாதிபதியாக பிரதம நீதியரசரை நியமித்து உடன் பொதுத்தேர்தலுக்கு செல்வது சிறந்த தீர்மானமாக அமையும். நாட்டு மக்கள் தமக்கான அரசாங்கத்தை தாராளமாகத் தெரிவு செய்துகொள்ளலாம். குறுகிய காலத் தீர்வு தொடர்பாக நாடாளுமன்றம் கவனம் செலுத்தாமல், நீண்டகால தீர்வு தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளேன். – என்றார்.

# இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பும் செய்தியை மறுக்கும் இந்தியா!

இந்தியா தனது இராணுவத்தை இலங்கைக்கு அனுப்புவது தொடர்பாக ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள ஊகச் செய்திகளை இலங்கையில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

இது தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தனது உத்தியோகபூர்வ டுவிட்டரில் வெளியிட்டுள்ள செய்தியில் –

இந்தியா தனது இராணுவத்தை இலங்கைக்கு அனுப்புவது தொடர்பாக ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் வெளியாகும் ஊகச் செய்திகளை உயர் ஸ்தானிகராலயம் திட்டவட்டமாக மறுக்க விரும்புகிறது. இந்த அறிக்கைகள் மற்றும் அத்தகைய கருத்துக்கள் நிலைப்பாட்டுக்கு ஏற்ப இந்திய அரசாங்கம் இல்லை.

ஜனநாயக வழிமுறைகள் மற்றும் மதிப்புகள், அதன்படி நிறுவப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அரசமைப்பு கட்டமைப்பின் மூலம் செழிப்பு மற்றும் முன்னேற்றத்துக்கான அபிலாஷைகளை நனவாக்க முயலும் இலங்கை மக்களுடன் இந்தியா நிற்கிறது என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் ஏற்கனவே தெளிவாகக் கூறியுள்ளார் என்று அந்த டுவிட்டர் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ஆகியோர் வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில் அவர்களுக்கு ஆதரவாக இந்திய இராணுவத்தை அனுப்பத் தயார் என பா.ஜ.க. வின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் கருத்தொன்றை பகிர்ந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நாட்டின் அரசமைப்பின் பிரகாரம் பிரதமர் பதவி விலக முடியாது!

## வஜிர அபேவர்தன கூறுகிறார்

நாடு தற்போதுள்ள நிலைமையில் அரசமைப்பின் பிரகாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலக முடியாது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராஜிநாமா செய்தாலும் அரசாங்கத்தைக் கொண்டு செல்வதில் சிக்கல் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மாத்திரமின்றி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலக வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ள தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர்.

எவ்வாறிருப்பினும் ஜனாதிபதி பதவி விலகும் பட்சத்தில் அரசியலமைப்பின் பிரகாரம் பிரதமரே அடுத்த ஜனாதிபதியாகப் பதவியேற்க வேண்டும் என்று அரசியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் பொது மக்கள் பிரதமரையும் பதவி விலகக் கோருவதால் மிகக்குறுகிய காலத்துக்கு சபாநாயகரைப் பதில் ஜனாதிபதியாக நியமித்து, அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை விருப்பைக் கொண்ட ஒருவரை ஜனாதிபதியாக நியமிக்க முடியும் என்ற மாற்று யோசனை முன்வைக்கப்பட்டு வருகிறது.

எவ்வாறிருப்பினும் கட்சி தலைவர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டமைக்கமைய தானும் பதவி விலகத் தயார் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருக்கின்றார்.

இந்நிலையிலேயே இது தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"அரசியலமைப்பில் அவ்வாறானதொரு சரத்து இல்லை. பிரதமருக்கு அவ்வாறு பதவி விலக முடியாது.

"எனவே அரசமைப்பிற்கு அமையவே செயற்பட வேண்டும். மாறாக பிரதமரை பதவி விலகுமாறு கோருவது, அரசமைப்பை மீறி செயற்படுமாறு வலியுறுத்துவதைப் போன்றதாகும்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்கள் தவறாக செய்திகளை வெளியிடுகின்றமை கவலைக்குரியது. அரசமைப்பின் 37 ஆவது சரத்தில் இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற நிலைமை ஏற்படும் போது, மீண்டும் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்காக 37 (1) , 37 (2) ஆகிய சரத்துக்களில் இந்த விடயம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான், ரஷ்யா உள்ளிட்ட நாடுகளில் இந்த



சரத்து பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறிருக்கையில் இலங்கையில் மாத்திரம் ஏன் பயன்படுத்த முடியாது? எனவே ஜனாதிபதி பதவி விலகும் பட்சத்தில் தொடர்ந்தும் அரசாங்கத்தைக் கொண்டு செல்வதில் எவ்வித சிக்கலும் கிடையாது". - என்று வஜிர அபேவர்தன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ராஜபக்ஷவினரின் சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு சிலர் முயற்சி

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



ராஜபக்ச அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட சர்வாதிகார ஆட்சி மக்கள் போராட்டத்தின் மூலம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜே.வி.பியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா இதனை குறிப்பிட்டார்.

ராஜபக்சவின் சர்வாதிகார ஆட்சி, அவர்கள் தேவைக்கு மீறிய சொத்துக்களை குவிக்க வழிவகுத்தது என அவர் சுட்டிக்காட்டினார்.

போராட்டத்தின் முடிவு தொடர்பாகச் சிலர் சந்தேகம் கொண்டிருந்தாலும் வெற்றி கிடைத்துள்ளதாக ரில்வின் சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இராஜினாமாவால் தற்போதுள்ள பிரச்சினைகள் தீரவில்லை என்றும் பொருளாதார நெருக்கடி, பொருள்களின் பற்றாக்குறை தொடர்கிறது என்றும் குறிப்பிட்டார்.

மேலும், வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம் போன்ற பிரச்சினைகள் இன்னும் அதிகமாகவே உள்ளன என ரில்வின் சில்வா சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான நிலையில் நிலவும் அரசியல் நெருக்கடியை பயன்படுத்திக் கொண்டு சில கட்சிகள் ஆட்சிக்கு வர முயற்சிக்கின்றன எனவும், அரசியல் அமைப்புகளில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்றும் ரில்வின் சில்வா வலியுறுத்தினார்.

அத்தகைய நபர்களை ஆட்சிக்கு வர அனுமதித்தால் நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது என ரில்வின் சில்வா குறிப்பிட்டார்.

# மக்களால் ஏற்கக்கூடிய அரசு உதயமாக வேண்டும்

## இராதாகிருஷ்ணன் வலியுறுத்து



இன, மத சாயமற்ற - மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசு உதயமாக வேண்டும் என்றும் ஊழல் அற்ற ஒருவர் அரச தலைவராக வேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதுதொடர்பாக மேலும் உரையாற்றிய அவர் -

9 ஆம் திகதியென்பது, இலங்கையில் மாற்றங்கள் நிகழும் நாளாக மாறியுள்ளதாகத் தெரிவித்தார்.

பௌத்த பிக்குகளால் முன்னிலைப்படுத்தப்பட்ட ஜனாதிபதி, பௌத்த தேரர்களாலும், வாக்களித்த மக்களாலும் விரட்டியடிக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது என்றும் இலங்கை அரசியல் வரலாற்றில் இது முக்கிய திருப்புமுனையாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மக்களுக்கு தகவல் அறியும் உரிமை இருக்கின்றது. அந்த பணியை ஊடகங்கள் ஆற்றுகின்றன.

ஜனாதிபதி பதவி விலகுவதில் ஊடகங்களின் பங்கும் உள்ளது. அப்படி இருக்கையில் போராட்டக்களத்தில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறேன் எனவும் பாதுகாப்பு வழங்க வேண்டியவர்களே, தாக்குதல் நடத்தியமை கவலைக்குரிய விடயமாகும் என்றும் தெரிவித்தார்.

மேலும், அடுத்து வரும் நாள்களில் அரசியல் மாற்றங்கள் இடம்பெறவுள்ளன எனத் தெரிவித்த இராதாகிருஸ்ணன், ஊழல் அற்ற ஒருவர், அரச தலைவராகும் காலம் விரைவில் ஏற்படும் என்றும் தெரிவித்தார்.

# 30 ஆயிரம் லீற்றர் டீசலை ஏற்றிச்சென்ற எரிபொருள் தாங்கி குடைசாய்ந்தது!

## திருமலையில் சம்பவம்



அப்புத்தளை பகுதியில் 30 ஆயிரம் லீற்றர் டீசலை ஏற்றிச்சென்ற எரிபொருள் தாங்கியொன்று குடைசாய்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளது.

திருகோணமலை ஐ.ஓ.சி. எரிபொருள் முனையத்தில் இருந்து அப்புத்தளைக்கு 33 ஆயிரம் லீற்றர் டீசலை ஏற்றிச்சென்ற எரிபொருள் தாங்கியே இவ்வாறு விபத்திற்குள்ளாகியுள்ளது.

அப்புத்தளை பங்கெட்டிய முஸ்லிம் மகாவித்தியாலயத்துக்கு அருகில் இந்த எரிபொருள் தாங்கி வீதியை விட்டு விலகி தடம்புரண்டுள்ளது.

சாரதியில் தூக்க கலக்கமே விபத்துக்கான காரணம் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவ்விபத்து தொடர்பாக அப்புத்தளை பொலிஸார் பூரண விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விபத்தில் எரிபொருள் தாங்கியில் இருந்த டீசல் முற்றாக வீண்விரயமானதுடன் எவ்வித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தீமூட்டுவது, சொத்துக்களுக்கு சேதமேற்படுத்துவது அமைதியான ஆர்ப்பாட்ட நோக்கத்துக்குப் பாதிப்பு!

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வருத்தம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு சொந்தமான வீடு எரியூட்டப்பட்டமைக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதாரத்துக்கும் பொதுமக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பொதுமக்களை வன்முறையில் ஈடுபடவேண்டாம் என கேட்டுக்கொண்டுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஏனையவர்கள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை அனுமதிக்கவேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தீமூட்டுவது சொத்துக்களிற்கு சேதமேற்படுத்துவது அமைதியான ஆர்ப்பாட்டங்களின் நோக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-60

### வரலாற்றின் தொடக்கத்தில் புலம்பெயர் சமூகம்

தமிழ் மக்களது வரலாறுகளைத் திரும்பிப் பார்த்தால் புலம்பெயர் தமிழர்களில் அமெரிக்காவிலிருந்து ஸ்ரீ தில்லையம்பலத்தின் பெயரும், டாக்டர் பஞ்சாட்சரத்தின் பெயரும் 1976 ஆம் ஆண்டுகளில் இருந்து பெருமளவில் சம்பந்தப்பட்டிருக்கின்றமையைக் காணலாம். அவர்கள் 1982 இல் அமெரிக்காவில் 'தமிழ் ஈழத்திற்கான தமிழர் பேரவை' மாநாட்டை தமிழ்நாட்டின் பல தலைவர்களோடும், அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சந்திரகாசன், ஈழவேந்தன் போன்ற ஈழத் தமிழ் தலைவர்களோடும் நடத்தி தீர்மானங்களை ஏற்படுத்தி இருந்தார்கள். பின் ஜூலை 1984 இல் அதே முறைகளில் தலைவர்களை அழைத்து சர்வதேசத்தமிழ் (Thamil International) என்ற பரப்புரை அமைப்பை சந்திரகாசன், நெடுமாறன், சச்சி பொன்னம்பலம், நடேசன் சத்தியேந்திரா அடங்கிய குழுவிற்குப் பாரம் தந்தார்கள். இரா.ஜனார்த்தனனிடமும் மணவைத்தம்பியுடனும் ஜெனிவாவில் இயங்கும் சர்வதேச அமைப்புகளுக்கு சமர்ப்பணங்களும் தொடர்புகளும் வைக்கின்ற பணிகளை ஒப்படைத்தார்கள். இனப்படுகொலை தொடர்பான முன்னெடுப்புகளை அன்பரசுவிடவும் சந்திரகாசனிடமும் தந்தார்கள்.



நெடுமாறன்



இரா.ஜனார்த்தனன்

இனப்படுகொலை முன்னெடுப்பு அப்பொழுது 1983 ஆடிக் கலவரங்களின் வன்முறையையும் அதற்கு முந்திய காலத்தையும் சார்ந்து இருந்தது.

தமிழர் பேரவை – முக்கியமாக டாக்டர் பஞ்சாட்சரம் – தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே உறவுகளை ஏற்படுத்தி இணைக்கத் தலைமையை அமைக்க பாடுபட்டார். அவை பிரபாகரனால் நிராகரிக்கப்பட்டன.



சந்திரகாசன்

அதற்குப் பின் நடந்த ஆயுதப் போராட்டத்திலும் அரசியலிலும் புலம்பெயர்தமிழ்மக்கள் விடுதலைபுலிகளின் தீர்மானங்கள், நியதிகளுக்கு ஏற்ப பங்குதாரிகள் ஆக்கப்பட்டார்கள்.

விடுதலை புலிகளின் பொறுப்பில் தொடர்ந்து நடத்தப்பட்ட போராட்டத்தை விடுதலைப் புலிகள் நாடிய உதவிகளை புலம்பெயர் மக்கள் கொடுத்தார்கள். ஆனால் அரசியல் பாதை விடுதலை புலிகளின் கைகளில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை வந்தது.

போரின் முடிவில் மிஞ்சிய அல்லது மீள எழுந்த புலம்பெயர் அமைப்புகளில் அந்தக் காலத்துக்கு முன் அயராது உழைத்தவர்கள் பலரைக் காண முடியவில்லை. ஆனாலும் விடுதலை புலிகளின் அர்ப்பணிப்பிலும் விசுவாசத்திலும் நம்பிக்கை வைத்தவர்கள் அவர்களது கொள்கைகளையும் இலட்சியங்களையும் முன்வைத்து நிற்கிறார்கள்.

ஆயுதப் போராட்டம் ஸ்ரீலங்காவின் இறைமைக்கு சவால் தரலாம் என்ற தாக்கம் இல்லாத இன்றைய காலத்தில், தமிழ் மக்களும் புலம்பெயரும் கூட, அவற்றிற்கு சர்வதேசத்தையும் ஐ.நாவின் கட்டமைப்புகளையும் தான் நம்பி இருக்க வேண்டி உள்ளது.

போரில் வென்றிருந்தால் கூட சுயநிர்ணத்துக்கோ, தனிநாடு என்ற அங்கீகாரத்துக்கோ சர்வதேச அனுசரணை ஐ.நாவின் ஊடாகவே வரவேண்டும். அதற்கான காலங்கள் நீண்டவை.

1982, 1984 களில் தமிழர் பேரவை அமெரிக்காவில் ஆக்கிய தீர்மானங்கள் இன்று போர் முடிந்து 13 வருடங்களும் புலம்பெயர் அமைப்புகள் தொடாதவை என்பவற்றை கணக்கிட்டு பார்த்தால் அதற்கான காலங்களும் புவியியல் நிகழ்வுகளுக்கான சந்தர்ப்பங்களும் நீண்டவை. வைகுண்டத்தில் இருந்து பெருமாள் இறங்கி வரும் காலமும் ஆகலாம்.

அதுவரை பேரினவாதம் நீதிமன்ற உத்தரவுகளையே மதிக்காமல் பௌத்தத்தை குறுந்தூர் மலையில் பதிக்க விரும்புகிறது.

'ஐயர் வரும் வரை அமாவாசை பொறுத்திருக்குமா?' என்பதை இங்கு புத்தர் பெருமான் என்பதால் பௌர்ணமி வரும் வரை காத்திருக்கலாமா என்று



சத்தியேந்திரா

மாற்ற வேண்டி உள்ளது. ஆகவே காலத்துக் கேற்ற அணுகுமுறைகள் அவசியம்.

(வளரும்)

---

## கப்பலில் வந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவசர உர விநியோகத்துக்காக இந்தியா விசேடமாக வழங்கிய கடன் மூலம் 2 லட்சத்து 61 ஆயிரம் மூடை உரம் கப்பலில் அவசர அவசரமாகக் கொண்டுவரப்பட்டது. அதில் ஆக நாற்பது மூடைகள் மட்டுமே கிளிநொச்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

கொழும்பின் இந்த ஓர வஞ்சனை நடவடிக்கை தொடர்பில் இரணைமடு விவசாயிகள் சம்மேளனச் செயலாளர் மு.சிவமோகன் கடும் கண்டனம் தெரிவித் தார்.

"இந்த நாட்டில் உழைப்பவர்கள் ஏமாற்றப்பட மறுபுறம் குளிரூட்டப்பட்ட அறைகளில் சாவகாசமாகத் தூங்குபவர்களிற்கு அள்ளி வழங்கியதன் அறுவடையையே இன்று நாடு அனுபவிக்கின்றது. இதனை அதிகாரிகள் இன்னும் உணர்கின்றவர்களாகவும் இல்லை.

அதாவது கிளிநொச்சி மாவட்டத்திற்கான சிறுபோக விதைப்பு இறுதித் திகதி 2022.04.30 என கணக்கிடப்பட்டபோதும் உழவிற்கான எரிபொருள் இன்மையால் 2022.05.31 ஆம் திகதியை தாண்டியும் விதைப்பு இடம்பெற்றது. அதாவது தறபோது 27 ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் மாவட்டத்தில் விதைக்கப்பட்டுள்ளது. இதில் 10 ஆயிரம் ஏக்கர் அறுவடையை அண்மித்துவிட்டது. அதே நேரம் 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் நிலம் 45 நாள் பயிரிலேயே உள்ளது. இந்த 45 நாள் பயிர்களிறகு தற்போது உரம் வழங்கப்பட்டேயாக வேண்டும். அவ்வாறு வழங்கினால் மட்டுமே முழுமையான உற்பத்தியைப் பெற முடியும்.

"இதேநேரம் மாவட்டத்தில் முழுமையான வயல் அறுவடைக்கு தயாராகிவிட்டது, உரம் இனித் தேவை இல்லை என அறிக்கையிடப்பட்டு, கண் துடைப்பிற்கு வெறும் 40 மூடை உரம் வருகின்றது. இவ்வாறு அறுவடைக்கு தயாராகிவிட்டது என்ற அறிக்கையை எந்த திணைக்கள அதிகாரி அனுப்பி வைத்தார்? மாவட்டச் செயலகமா? கமநல சேவைத் திணைக்களமா? அல்லது விவசாயத் திணைக்களமா? இந்த அறிவிப்பை உறுதி செய்தவர் யார் என்பதனை அதிகாரிகள் பகிரங்கப்படுத்தியே ஆக வேண்டும்.

"இந்த நாட்டின் சாபக்கேடு இதுதான் என்ற அடையாளமாக அமைந்த இந்தப் பாவச் செயலை செய்த அதிகாரிகள் குளிரூட்டப்பட்ட அறையில் இருந்து வெளியே வந்து வயல்களை நேரடியாகப் பார்வையிட வேண்டும். ஏனெனில் எதிர்வரும் நாள்களில் எமது போராட்ட வடிவம் எந்த உருவத்தில் இருக்கும் என நாம் தற்போது கூற விரும்பவில்லை. இதனை சம்பந்தப்பட்ட சகலரும் உடன் கவனத்தில் எடுத்து, தவறை விரைந்து திருத்துவது வீணான மனக் கசப்புகளைத் தவிர்க்கும்." – என்றார்.

இது தொடர்பில் மாவட்ட கமநல உதவி ஆணையாளர் பா.தேவரதனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது –

இந்த அளவினையோ அல்லது வயல் நிலவரம் தொடர்பிலோ எம்மால் அறிக்கையிடப்படவில்லை என்றார்.

விவசாய சம்மேளனத்தின் கூற்றுத் தொடர்பில் மாவட்ட அரச அதிபரான திருமதி.ரூபவதி கேதீஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது –

மாவட்டத்தின் நீர் அளவையொட்டி முதலில் தீர்மானிக்கப்பட்ட அளவினை விட 5ஆம் மாதம் மேலும் 2 ஆயிரத்து 500 கெக்டேயர் விதைப்பு அனுமதிக்கப்பட்டது. அதனால் அவை தற்போது சிறு பயிராகவே இருக்கும். இந்த அளவிற்கும் ஒரு லட்சத்து 25 ஆயிரம் கிலோ யூரியா தேவை என்ற விவரத்தினை நாமும் அனுப்பியிருந்தோம். இருப்பினும் 40 மூடையை (2 ஆயிரம் கிலோவை) தீர்மானித்தமை தொடர்பில் எமக்கும் ஏதும் தெரியாது. – என்றார்.

---

## இந்திய மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைதான மீனவர்கள் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

---

## ஜனாதிபதி ஆசனத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை கட்சியின் தவிசாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வழிமொழிந்துள்ளார். இதற்குக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைகளை உயர்த்தி ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

இதன்படி புதிய ஜனாதிபதிக்காக நாடாளுமன்றத்தில் பெயர் பரிந்துரைகளைக் கோரும்போது சஜித் பிரேமதாஸவின் பெயர் ஐக்கிய மக்கள் கட்சியினரால் முன்வைக்கப்படவுள்ளது.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் புதிய ஜனாதிபதி ஒருவரின் பெயரைப் பரிந்துரைக்க ஆராய்ந்து வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

---

## ஜனாதிபதியின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேண்டும் என்று கேட்டுக்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று முற்பகல் விசேட ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டுள்ளது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழ்ப் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=